செய்தி வெளியீடு எண்: 162 நாள் : 17.04.2015

# பத்திரிக்கைச் செய்தி

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை அலுவலர்களின் செயல்பாடுகள் குறித்த மாநில அளவிலான ஆய்வுக் கூட்டம், 17.04.2015 இன்று சென்னை, சேப்பாக்கம் எழிலகத்தில் மாண்புமிகு உணவு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் இரா. காமராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, விலையில்லா அரிசி வழங்கும் திட்டத்திற்கு, மாதாந்திர ஒதுக்கீட்டு ஆணை அந்த மாதத்தின் 3ஆம் தேதிக்குள்ளாகவே பிறப்பிக்கப்பட வேண்டுமெனவும், முந்தைய மாதத்தின் இறுதிக்குள் 60 சதவிகிதமும், மீதமுள்ள 40 சதவிகிதம் ஒதுக்கீட்டு மாதத்தின் முதல் வாரத்திலேயே நியாய விலை அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்படுவதை வழங்கல் அலுவலர்கள் உறுதி செய்து வரவேண்டுமென மாண்புமிகு அமைச்சர் கேட்டுக்கொண்டார். நியாயவிலை அங்காடிகள் குறித்த நேரத்தில் திறக்கப்பட்டு, உரியவர்களுக்கு, உரிய எடையில், உரிய தரத்தில் விநியோகம் சீரான முறையில் நடைபெறுவதையும், பொது விநியோகத் திட்ட கிடங்குகளிலிருந்து, நியாய விலை அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்படும் லாரிகள், மாவட்ட ஆட்சியரால் அங்கீகரிக்கப்பட்ட வழித்தடங்களிலேயே

நகர்வு செய்யப்படுவதையும் தொடர்ந்து கண்காணிக்க வேண்டுமென்று அலுவலர்களை அறிவுறுத்தினார். தமிழ்நாட்டில் 5 மாதத்திற்கு போதுமான புழுங்கல் மற்றும் பச்சரிசி கையிருப்பில் உள்ளதாகவும், ஏனைய மானிய விலைப்பொருட்கள் தேவையான அளவுக்கு அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்பட்டு வருகின்றன என்றும் மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

பொது விநியோகத் திட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை களைவதற்கு, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மூலமாக மாதந்தோறும் 2ஆம் சனிக்கிழமைகளில் நடத்தப்படும் குறைதீர் முகாம்களில், ஏப்ரல் 2015 வரையில், 3 இலட்சத்து 53 ஆயிரத்து 914 மனுக்கள் பெறப்பட்டு, அவற்றில் 3 இலட்சத்து 37 ஆயிரத்து 661 மனுக்கள் அன்றைய தினத்திலேயே தீர்வு செய்யப்பட்டும், மீதமுள்ள 16 ஆயிரத்து 253 மனுக்கள் பின்னரும் தீர்வு செய்யப்பட்டுள்ளன. பொது மக்களிடையே அமோக வரவேற்பை பெற்றுள்ள இவ்வகை முகாம்களை நடத்தும் ஒரே மாநிலம் இந்தியாவிலேயே தமிழ்நாடு மட்டும்தான்.

இன்று வரை 11 இலட்சத்து 10ஆயிரத்து 871 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 24 ஆயிரத்து 626 புதிய குடும்ப அட்டைகள் மனுதாரர்களுக்கு வழங்குவதற்கு தயாராக உள்ளது. இன்று வரை, 3 இலட்சத்து 70 ஆயிரத்து 538 போலி அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டு ரத்து செய்யப்பட்டுள்ளன என்றும் புதிய குடும்ப அட்டைகள் கோரி பெறப்படும் மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து 60 நாட்களுக்குள் அட்டைகள் வழங்கப்பட வேண்டுமென்றும் அறிவுறுத்தினார்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, மக்கள் நலத்திட்டங்களின் முழுப்பயன்களும் உரியவர்களை சென்றடைய அலுவலர்கள் எடுத்த கூட்டுமுயற்சியின் பயனாக, இன்று வரை அத்தியாவசியப் பொருட்கள் கடத்தல் தடுப்பு நடவடிக்கைகள் மூலம் **23,339** நபர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுள் **663** பேர் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் (BM Act) கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்று மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மை செயலாளர், திரு.முகம்மது நசிமுத்தின் இ.ஆ.ப., உணவுப் பொருள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர், திரு.சூ.கோபாலகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திரு.எம்.சந்திரசேகரன்,இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், 3 திருமதி. ஜெயஸ்ரீமுரளீதரன், இ.ஆ.ப. மற்றும் உணவுப் பொருள் குற்றப்புலனாய்வுத் துறை கூடுதல் இயக்குநர் திரு.கே.இராதாகிருஷ்ணன், இ.கா.ப., மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**